**O.S.No. 104/2015**

**Date 07.02.2025**

**வா.சா.3 குட்டிராஜா**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். 1 முதல் 4 பிரதிவாதிகளின் குடும்பத்தினரின் விவாகரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதியின் முந்தைய வாழ்க்கை, அவருக்கு யாருடன் திருமணம் செய்யப்பட்டிருந்தது என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி எங்கள் ஊருக்கு குடியிருக்க வந்து சுமார் 10, 11 வருடங்கள் இருக்கும் என்றால் 25 வருடங்கள் இருக்கும். வாதிக்கு முதல் திருமணம் வாழ்க்கை என்ன ஆனது என்பது குறித்து தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் பஞ்சவர்ணம் என்பவர் கோபாலகிருஷ்ண நாடாரை 30 வருடங்களுக்கு முன்பு பிரிந்து சென்றுவிட்டதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. பஞ்சவர்ணம், முருகேஸ்வரியும் கொடைக்கானல் எஸ்டேட்டில் வேலை பார்த்து வருகின்றனர் என்றால் சரிதான். கோபாலகிருஷ்ண நாடாருக்கும் பஞ்சவர்ணத்திற்கும் யாதொரு நீதிமன்றத்திலும் விவகாரத்து பெறவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் வாதிக்கும் கோபாலகிருஷ்ணநாடாருக்கும் திருமணம் நடைபெற்றதும், அதை நான் பார்த்தாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. கோபால கிருஷ்ணநாடாரின் இறப்பு சமயம் வாதி இறப்பு சடங்குகள் செய்வதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் நல்லது கெட்டதுக்கு ஊர் காசு திருமணம் மற்றும் இறப்பு வசூலித்து பதிவேடுகள் பராமரித்து வருவது 50 ஆண்டுகால வழக்கமாக உள்ளது என்றால் சரிதான். வாதியின் திருமண சமயம் அவ்வாறு ஊர் காசு வசூலிக்கப்படவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறியுள்ள கோபாலகிருஷ்ண நாடார் வாதி அவரது மனைவி என்ற நிலையில் வரி செலுத்திவந்ததாக சொல்லுவது தவறானது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் கற்பனையானது என்றாலும் வாதிக்கு கோபாலகிருஷ்ணநாடாருக்கும் யாதொரு காலத்திலும் கணவன் மனைவி முறை இருந்தது கிடையாது என்றாலும் சரியல்ல.

வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரதிவாதிகள் மீதுள்ள வன்மத்தின் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும் எனக்கும் சுமூகமான பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான்.

**ம.வி இல்லை.**